Registered as a NewsPaper

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 20 | 03-04-2003 | வியாழக்கிழமை | ஓசை 44

அழகன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

- தரமான முறையில்
- கணினி முறையில்
- குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம். யாழ். சாலை, கிளிநொச்சி.

# மாநகரசபை நிலத்தில் முகாம் அமைக்கும் முயற்சியை இராணுவம் இடைநிறுத்தியது

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன வாக்குறுதி

**தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்பினையும், மக்களின் எதிர்ப்புக் களையும் அடுத்து யாழ். மாநகர சபை பழைய கட்டட வளாகத்தில் முகாம் அமைக்கும் நடவடிக்கையை சிறிலங்கா படைத்தரப்பு இடைநிறுத்தியுள்ளது.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான நேற்றைய சந்திப்பின் போது சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் நடைபெற்ற இச்சந்திப்பில் அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, சிறிலங்கா இராணுவத்தளபதி லயனல் பலகல்ல ஆகியோரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான என்.கே. சிவாஜிலிங்கம், இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், பொன்னம்பலம் கஜேந்திரகுமார், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தில் இணைந்த இரு சிறுமிகள் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

போராட்டத்தில் இணைந்துகொண்ட பதினெட்டு வயதிற்குக் குறைந்த இரண்டு சிறுமிகள் நேற்று பெற்றோரிடம் மீள ஒப்படைக்கப் பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட அலெக்சாந்தர் ரதிப்பிரியா, சிவகுமார் நிஷாந்தினி ஆகிய இருவரையும் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் வைத்து பகல் 11 மணியளவில் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.(பா)

# சிறிலங்காவிற்கு 80 கோடி டொலர்; நிதியுதவி வழங்க உ.வங்கி முடிவு!

(கொழும்பு)

இலங்கையின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக எண்பது கோடி டொலர் பெறுமதியான நிதியுதவிகளையும், கடன் வசதிகளையும் வழங்கி சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்கப் போவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

ஒருவருட காலத்திற்கு முன்னர் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் உலக வங்கி அறிவித்துள்ள பாரியளவிலான நிதியுதவி இதுவாகும்.

உலக வங்கியின் பிராந்திய முகாமையாளர் பீற்றர் கரோல்ட் விடுத்த அறிக்கையில்: நிலைபேறான சமாதானம், துரித பொருளாதார வளர்ச்சி, வறுமை ஒழிப்பு என்பவற்றை இலங்கை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் இவற்றின் காரணமாக நாட்டு மக்கள் அனைவருமே நன்மைய

(08ஆம் பக்கம் பார்க்க)

## உளவுப்பிரிவினருடன் இணைந்து செயற்பட்டவர் மட்டு. இல் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காபடையினரின் உளவுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டுவந்த முன்னாள் ரெலோ உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சீனித்தம்பி ரஞ்சன் என்பவரே நேற்று முற்பகல் 11.15 மணியளவில் ஆரையம்பதி வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ரெலோ வரதன் என்று அழைக் கப்படும் இவர் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ரெலோ சார்பில் போட்டியிட்டவர். சம்ப வதினம் பொலிசாருடன் உரை யாடிக்கொண்டிருந்த போது இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் நாளையும் நாளை மறுதினமும் விசேட வைத்திய நிபுணர்கள் பங்கேற்கும் சிகிச்சை முகாம்

(வலக செய்தியாளர்)

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினரால் மேற்கொள்ளப்படும், விசேட வைத்திய நிபுணர்கள் பங்குகொள்ளும் சகல நோய்களுக்குமான இலவச மருத்துவ சிகிச்சை முகாம், நாளையும் நாளைமறுதினமும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், சத்திரசிகிச்சை, பற்சிகிச்சை, எக்ஸ் கதிர் சிகிச்சை, மகப்பேற்றுக் சிகிச்சை, தோல் மருத்துவம், குருதி அழுத்தம், மற்றும் சகல நோய்களுக்கும் அந்தந்த நோய்களுக்கான துறை சார்ந்த விசேட வைத்திய நிபுணர்களால் இவ் இருநாட்களும் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. இருதினங்களும்

(08ஆம் பக்கம் பார்க்க)



கூட்டுப் படை உலங்குவானூர்தி, வாகனம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலால ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு சிறுவர்கள் உட்பட 15 பேர் பலியாகினர். ஈராக்கின் தென் மாகாணத்திலுள்ள ஹில்லா என்னும் இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் தனது குடும்பத்தைப் பறிகொடுத்த ஈராக்கியர் தனது குழந்தைகளின் சடலங்களைப் பார்த்துக் கதறியழும் காட்சி.

# அமெ. வின் குண்டு வீச்சினால் பெருமளவு மக்கள் பலியாகினர்!

## குறைந்தது 677 பேர் பலி; 5036 பேர் காயம்




இதுவரை அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் 677 பேர் பலியானதாகவும் 5036 பேர் காயமடைந்ததாகவும் பாக்தாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈராக்கின் தென்பகுதியிலுள்ள அல் கில்லா நகர்ப்பகுதியில் அமெரிக்க கூட்டுப்படைகளின் தாக்குதல்களால் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் உள்ளனர். இதனைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உறுதி செய்துள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஈராக்கிய பணியாளர்களுடன் இவ் அமைப்பின் மருத்துவர் ஒருவரும் மற்றும் பணியாளர் ஒருவரம் முதல் தடவையாக

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

சில்லறைப்பணம் எமக்குத் தேவையாக உள்ளது. 1000ரூபா தருபவர்களுக்கு 50 ரூபா வீதம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: மதி உணவகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு. (சி-7729)

### தவறிவிட்டது

27-03-2003 அன்று இரவு புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத் தீவிற்கு வாகனத்தில் எடுத்துச்சென்ற விற்பனைக்குரிய புடைவைகள் அடங்கிய பொதி ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு திருக்குமரன் புடைவை மாளிகை யினருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-7735)


# பூநகரிப் பிரதேசத்தில் இரு பாடசாலைகள்; மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பம்!

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி பிரதேசத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த இரண்டு பாடசாலைகள் மீண்டும் தமது




சொந்த இடத்தில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி / கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம், ஞானிமடம் அ.த.க. பாடசாலை ஆகியவையே நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டன. கிளி. கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் 1991ஆம் ஆண்டு வலம்புரி இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து பூநகரி அரசபுரம் கிராமத்திலும், ஞானிமடம் அ.த.க. பாடசாலை பூநகரி 4ஆம் கட்டையிலும் இயங்கிவந்தன.

இப்பாடசாலைகளே தற்பொழுது பழைய இடத்தில் திறந்து வைக்கப்பட்டன. இப்பாடசாலைகளுக்கெனத் தற்காலிக மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இருபாடசாலைகளிலும் தமிழீழ தேசியக் கொடியினை வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் ஏற்றிவைக்க, பாடசாலைகளின் பெயர்ப்பலகையினை கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் திரை நீக்கம் செய்துவைத்தார். பாடசாலை வகுப்பறை மண்டபங்களை கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்

பூநகரிப் பிரதேச செயலர் க. வைரமுத்து, பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி தி. கணபதிப்பிள்ளை, பூநகரி ப.நோ.கூ.ச. தலைவர் பொன். தில்லைநாதன், பூநகரி பொதுசன ஒன்றியத் தலைவர் பொ. தங்கராசா மற்றும் அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் கலந்து பாடசாலைகளின் ஆரம்ப நிகழ்வினைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ,லோ)




## திருத்தம்

நேற்றைய ஈழநாதம் நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட, 'கிளிநொச்சி, கச்சேரி கேள்விகள் கோரும் அறிவித்தல்' என்னும் விளம்பரத்தில் சிறு தவறு ஏற்பட்டுள்ளதால் அப்பந்தி திருத்திய முறையில் தரப்படுகிறது.

கிளிநொச்சிக் கச்சேரித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் (ICTAD M6க்கு பதிவு செய்தவர்கள்) அனுமதிக்கப்பட்ட சங்கங்களிலிருந்தும், கிளிநொச்சி மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் கட்டட நிர்மாண வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. பதிவுக்காகத் தேவைப்படும் மீளப்பெறக் கூடியதும் மீளப் பெற முடியாததுமான பதிவுத் தொகைகள் பின்வருமாறு அமையும்.


## துயர் பகிர்கின்றோம்

### திருமதி சோதி முத்துலிங்கம்

எமது வைத்தியசாலை விடுதி இலிகிதர் செல்வி கேதாம்பாள் முத்துலிங்கம் அவர்களின் அன்புத்தாயார்,திருமதி சோதி முத்துலிங்கம் அவர்கள் 29.03.2003 அன்று சனிக்கிழமை இறைபதம் எய்தியுள்ள துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் எமது ஆழ்ந்த துயரினையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

**வைத்தியசாலை சேவையாளர் நலன்புரிச்சங்கம்,**
**வைத்தியசாலை அபிவிருத்திச் சபை,**
**வைத்தியசாலை ஆரோக்கிய சித்தி விநாயகர் பரிபாலன சபை,**
**மல்லாவி.**

(சி-8051)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:- ஆயப்பகுதி - நடுவப்பணியகம், கிளிநொச்சி.**
**காலம் :- 12-04-2003, மு.ப. 10.00 மணி**

**பணிநிலை:-**

01) ஆய அலுவலர் (இருபாலாரும்)
02) ஆய உதவியாளர் (ஆண்கள்)
03) எழுதுநர் (ஆண்கள்)
04) தட்டெழுத்தாளர் (ஆண்கள்)
05) சமையலாளர் (ஆண்கள்)
06) சமையல் உதவியாளர் (ஆண்கள்)
07) பாதுகாப்புப் பணியாளர் (ஆண்கள்)
08) மொழிபெயர்ப்பாளர் (ஆண்கள்)

**கல்வித் தகைமை:-**

பணிநிலை 01,03இற்கு க.பொ.த.(உ/த) சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 02இற்கு க.பொ.த. (சா/த) கற்றிருத்தல்.
பணிநிலை 4இற்கு க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.
பணிநிலை 05இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
பணிநிலை 06இற்கு 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 07இற்கு தேகாரோக்கியமும், நன்நடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
பணிநிலை 08இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர், எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

சிறப்புச்சலுகை:- கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.

சு. தேவநேசன்,
பணிப்பாளர்,
ஆயப்பகுதி - நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(சி-8050)

ஆயம்,
நிதித்துறை,
தமிழீழம்.

# பாக்தாத் மீது பெரும் தாக்குதலுக்கு முயற்சி; எதிர்த் தாக்குதலால் கூட்டுப்படை பின்நகர்வு!

## தரையில் ஈராக்கின் கை ஓங்குகிறது!

**ஈராக் தலைநகர் பாக்தாத் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் பெரும் தாக்குதலொன்றை நடத்தத் தயாராகி வரும் நிலையில் ஈராக்கிய எதிர்த்தாக்குதல்களை எதிர்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை கூட்டுப்படைகள் சந்தித்து வருவதாக களமுனைப்பகுதிகளிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**


கூட்டுப்படைகளின் நடவடிக்கை பதினான்காவது நாளை எட்டிவிட்ட நிலையில், அவர்களின் வான்வழித்தாக்குதல்கள் தீவிரமாக இருக்கிறது.. கூட்டுப்படைகள் தொடர்ந்து வான்வழி ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளன. ஈராக்கில் தலைநகர் உட்பட பல முக்கிய நகர்ப்பகுதிகளில் வான்வழித்தாக்குதல்கள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

ஆனால், தரையில் ஈராக்கிய படைகளின் கை ஓங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. பிடித்து வைத்திருந்த சில பகுதிகளிலிருந்து கூட்டுப்படைகள் பின்வாங்கியிருப்பதாகவும் தொடர்ந்தும் ஈராக்கில் தரைப்படைகளின் எதிர்த்தாக்குதல் மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் நகரிற்கு தென்மேற்கே இருந்து தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. கர்பாலா நகருக்கு வடக்கே நிறுத்த ப்பட்டிருக்கும் ஈராக்கிய அதிரடிப்படையின் மெரினா நகர பாதுகாப்பு அரணை தகர்த்துக் கொண்டு அமெரிக்கப் படைகள் பாக்தாத்தை நோக்கி முன்னேறும் என்று கூறப்படுகிறது.

பாக்தாத்திற்கு தெற்கே 80 கிலோ மீற்றர் தூரத்தில் கர்பாலா நகரிற்கு அருகே ஈராக்கிய குடியரசு காவல்படையுடன் அமெரிக்கப்படையினர் தற்போது சண்டையிடுவதாக வாஷிங்டனில் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய குடியரசு காவல் படையுடன் அமெரிக்கப் படைகள் தரைச்சண்டையில் ஈடுபட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.



கடந்த 1ம் திகதியன்று பாக்தாத் நகரில் நடந்த விமானத் தாக்குதலில் பாக்தாத்தின் அயல் பகுதியும் அதிர்ந்தது. அதன் போது ஏற்பட்ட புகைமண்டலம்.

# நிபந்தனையின்றி சரணடைவது பற்றியே ஈராக்குடன் இனிமேல் பேசுவோம்

### -அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் அரசுடன் அமெரிக்காவும், பிரிட்டனும் பேச்சுவார்த்தை நடாத்துமானால் அரசாங்கம் நிபந்தனை எதுவும் இன்றி சரணடைவது பற்றியதாகவே அது இருக்கும் என அமெரிக்க பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் கூறியுள்ளார்.

பென்டகனில் நேற்று முன்தினம் நிகழ்த்திய உரையில், ஈராக் யுத்தத்தில் அமெரிக்கத் தலைமையிலான படை சதாம் அரசுடன் யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது என ஈராக் அரசு வதந்திகளைப் பரப்பி வருகிறது எனக் கூறியுள்ளார்.

கூட்டுப்படை யுத்தத்தை தற்போதைக்கு முடித்துக் கொள்ளும் நோக்கத்தில் இல்லையென ஈராக் மக்களுக்கு எடுத்துக் கூறுவதாக கூறிப்பிட்ட அவர் சதாம் அரசுபொய் கூறுகிறது என குற்றம்சாட்டியுள்ளார். அத்துடன் அவரது அரசுடன் எவரும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என கூறியுள்ளார்.

சதாமும் அவரது ஆட்சியும் தொடர்ந்து பதவியில் இருக்கும் வகையிலான முடிவு எதுவும் இந்த யுத்தத்தினால் ஏற்படப் போவதில்லையெனக் கூறியுள்ளார்.



எரிந்து கொண்டிருக்கும் ஜோர்ஜ் புஷ்ஷின் உருவ பொம்மையை உதைக்கும் பங்களாதேச யுத்த எதிர்ப்பாளி.

## புனித யுத்தத்திற்கு தயாராகுங்கள்!

### சதாம் அறைகூவல்

(பாக்தாத்)

புனித யுத்தம் ஒரு மதக்கடமையென சதாம் ஈராக்கிய மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியுள்ளார்.

அத்துடன் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வரும் அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புக்களை கண்ட இடத்தில் அவர்களுடன் யுத்தம் செய்யுமாறு அவர் மேலும் கூறியுள்ளார். இவரின் இச் செய்தியை தகவல் அமைச்சர் முகமத் சயித் அல் சகாப் தொலைக்காட்சியில் வாசித்துள்ளார்.

# யுத்தத்தில் ஈராக் வெல்லும்; துணைப்பிரதமர் நம்பிக்கை!

அமெரிக்கத் துருப்புக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈராக் வெற்றி பெறும் என ஈராக்கியத் துணைப்பிரதமர் தாரிக் அசீஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். பாலைவன யுத்தத்தில் ஈராக் வெற்றி பெறுவதுடன், யுத்தத்திற்கான அமெரிக்காவின் நோக்கங்களை ஈராக் முறியடிக்கும் என கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நோக்கங்கள் நிறைவேறாமல் செய்யமுடிந்தால் அது ஈராக்கிற்கு வெற்றியைத் தருவது போலாகும் என அரபுலக செய்மதி வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் துணைப் பிரதமர் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் நடந்த கூட்டம் ஒன்றின் போது "கலஎஸ்னிகவ்" ரக ரைபிள் ஒன்றை அசைத்துக் காட்டும் ஈராக்கிய பெண்.

### - வாஜ்பாய் அரசின் முயற்சிக்குப் பின்னடைவு -

# வை.கோ.வுக்கு ஆதரவான மத்திய அரசின் புதிய மனு உச்சநீதிமன்றால் நிராகரிப்பு!

(சென்னை)

பொடோ சட்டத்தை எதிர்த்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தொடர்ந்த வழக்கில் மத்திய அரசு சமர்ப்பித்த புதிய மனுவைத் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியதற்காக பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட வை.கோ. அச்சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இவ் வழக்கில் மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில் புலிகளை ஆதரித்து வை.கோ. பேசியது பயங்கரவாத செயல்தான். தனி மனித நலனைவிட நாட்டின் ஒட்டுமொத்த நலனே முக்கியமென்பதால் பொடோ சட்டத்தை எதிர்க்கும் வை.கோ.வின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

அதனால் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து வை.கோ. வின் பேச்சு பயங்கரவாத செயல் அல்ல என்று ஒரு புதிய மனுவை தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றத்தை மத்திய அரசு அணுகியது.

தற்போது வை.கோ. வழக்கில் புதிய மனு எதுவும் தாக்கல் செய்யக்கூடாது என்றும் விரைவில் இந்த வழக்கு விசாரணைக்கு வரும் போது தான் மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால் வை.கோ. வுக்கு ஆதரவாக மனுவை மாற்றும் மத்திய அரசின் முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

# தூய்மையான அரசியலை நடத்த உறுதி பூண்டுள்ளோம்

### - பிரதமர் வாஜ்பாய் கூறுகிறார்

எங்கள் ஆட்சி மீது ஊழல் குற்றச்சாட்டுச் சொல்லி யாராவது விரலை நீட்ட முடியுமா? என பிரதமர் வாஜ்பாய் டெல்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக் கூட்டத்தில் சவால் விட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசியல் என்பது இப்போது, அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு விளையாட்டாகவும், அதிகாரத்தைப் பிடித்த பின்பு சொத்துச் சேர்க்கும் வழியாகவும் ஆகிவிட்டது. ஆனால் நாங்கள் தூய்மையான அரசியலை நடத்துவதில் உறுதியாக இருக்கிறோம் என்றார்.

# பாக்தாத்தை நெருங்குவதில் தேக்க நிலை....

ஒரு வாரம் தேவையில்லை தனது முப்படைகள் மூலம் ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து கவிழ்ப்



பதற்கு என்று கூறி அமெரிக்க சனாதிபதி புஷ் ஆரம்பித்த இரண்டாவது வளைகுடா யுத்தமானது தொடர்சங்கிலியால் அரை மாதத்தை எட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கிறது.

அதே நேரம் ஈராக்படைகள் மேற்கொள்ளும் கொரில்லா அதிரடித்தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க கூட்டுப்படைகளுக்கு ஆயுதவசதிகள் போதாது என்றும், உணவு விநியோகம் கஸ்ரமாக உள்ளமையினாலும் கூட்டுப்படைகளை ஒருவாரகாலத்திற்கு தரைவழித்தாக்குதல்களை நிறுத்திவைக்குமாறு அமெரிக்கப் பென்டகன் இரகசிய உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா பெரிய வல்லரசு. அமெரிக்காவைக்கண்டு ஏனைய நாடுகள் பயம் காரணமாக சலாம் போடுகின்றனவே தவிர, எதிர்ப்பை வெளிப்படையாக ஈராக், வட கொரியா போல் எந்த நாடுமே காட்டுவதில்லை. அப்படியிருக்கும் போது ஈராக் அமெரிக்காவுக்கு கொஞ்சம் தலைவலியைக் கொடுத்தது, கொடுக்கின்றது என்றால் மிகையாகாது.

அதே நேரம், அமெரிக்க விமானங்கள்




ஏவுகணைகளை திசைதிருப்பும் ஜி.பி.எஸ். ஜெம்மர்ஸ் எனப்படும் அதி நவீன மின்னணுக் கருவிகள் ஈராக்கிடம் இருப்பதாக அமெரிக்கா சந்தேகத்தை தற்போது எழுப்பியுள்ளது.

ஏனெனில் இக்கருவியானது செயற்கைக் கோள்களுடன் விமானங்கள், ஏவுகணைகளுக்கு உள்ளதொடர்பைத் துண்டித்து விடுவதுடன், விமானங்கள், ஏவுகணைகள் இலக்கை விட்டு வேறிடத்தில் தாக்கும் நிலையையும் தோற்றுவிக்கும் தன்மை கொண்டவையாகும்.

இந்த வகையில் தான் அமெரிக்காவிற்கு புதிய உபாதை தோன்றியுள்ளது. கடந்த் சில நாட்களாக வளைகுடாவிலுள்ள போர் கப்பல்களிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள் ஈரான், துருக்கி, சிரியாவில் போய் விழுந்துள்ளன.

அதேபோல், அமெரிக்க ஏவுகணையே பிரிட்டிஷ் விமானத்தை தாக்கியழித்துள்ளதுடன், இரண்டு பிரிட்டிஷ உலங்குவானூர்திகள் மோதிக் கொண்டுள்ளன.

இவ்வாறு இழப்புகள் தொடரத் தொடரகோப மடைந்த அமெரிக்க சனா திபதி "பனை மரத்தில் தேள் கொட்ட தென்னை மரத் திற்கு வைத்தியம் பார்த்த கதையாய்" ஈராக் மீதான கோபத்தை ரஷ்யா மீது திருப் பியுள்ளார்.

ஐ.நா. சபையை மீறி ரஷ்யா, ஈராக்கிற்கு இந்த மின்னணு உபகரணங்களையும், ஏனைய இராணுவ தளபாட உபகரணங்களையும் வழங்கியதாகவும் இச்செயற்பாடு ஐ.நா. சபையை அவமதிக்கும் நடைமுறை எனவும் கோபத்துடன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு விந்தைகுரிய ஒன்றாகும். உலக மன்றமாகிய ஐ.நா.சபையை அலட்சியப்படுத்தி, உலக மக்களின் முழு எதிர்ப்பையும் தன் வசமாக்கிக் கொண்டே ஈராக் மீதான தாக்குதல்களை புஷ் ஆரம்பித்தார்.

இந்த வகையில் பார்க்கையில், எனக்கு ஐ.நா சபையில் நிறை வேற்று அதிகாரங்கள் எல்லாம் வெறும் குப்பைத் தொட்டிக் காகிதங்கள். ஆனால் ஏனைய நாடுகளுக்கு அவை தாரக மந்திரமாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் வலியுறுத்து வதாக இருப்பது எந்த வகையில் நியாயமானது?.

அதே நேரம் ஈராக் போரின் முடிவில் (முடியாத போரை முடிந்துவிடும் எனும் குருட்டு நம்பிக்கையில்) ஈராக்கை மீள புனரமைப்பது பற்றிய விடயத்தில் அமெரிக்க சனாதிபதி புஷ்சும், பிரிட்டிஷ பிரதமர் ரொனிப் பிளேயரும் கருத்து முரண்பாடு கொண்டுள்ளனர்.

ஐ.நா. சபை முழுஉதவி களையும் வழங்க வேண்டுமென ரொனிபிளேயரும், இல்லை ஈராக் மக்கள் ஒவ்வொரு வரும் செல்வந்தர்கள் அதனால் எவ்வித உதவிகளையும் ஐ.நா.சபை வழங்கத் தேவையில்லை என புஷ்சும் கருத்தளவில் மோதிக் கொண்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து ரொனி பிளேயர் அவசரஅவசரமாக, ஐ.நா.செயலாளர் கொபி அனானை சந்தித்துத் தனது விருப் பத்தை வெளியிட்டுள்ளார். இதுவும் ஒரு இராஜ தந்திரமாக இருக்கலாம். ஏனெனில் உலக மக்கள் எதிர்க்கின்றனர். அதே நேரம் பிரிட்டிஷ் மக்களே ரொனி பிளேயரின் கூட்டு முயற்சிக்கு கண்டனமும் ஆர்ப்பாட்ட ஊர் வலங்களும் நடத்திக் கொண்டு இருக்கின்றனர்.

இதைச் சமாளிக்கவே ஈராக்மீதான ரொனிபிளேயரின் அனுதாப அலை வீசுகின்றது. இந்தஅனுதாபஅலை மாறலாம்.... மாறும். ஏனெனில், ஈராக்கின் எண்ணெய் வளத்தின் மீதுதான் ரொனிபிளேயருக்கும் குறி- நாளை ஈராக் அமெரிக்காவசமாகும் போது, தனக்கு சலுகைகள் காத்திருக்கின்றன என்பது பிளேயருக்குத் தெளிவான உண்மை.

இதனிடையே ஈராக் மீதான தாக்குதலை, ஈராக் மக்களின் விடுதலைக்கான போர் என்று கூறி அமெரிக்கா, அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதும், சொத்துக்களை நிர்மூலம் ஆக்குவதும்தான் விடுதலைக்கான போரா..... என அவதானிகள் வினா எழுப்பியதனால் கொஞ்சம் தடுமாற்றத்திற்குள்ளான புஷ், தடாரென ஈராக் மீதானபோர் சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து கவிழ்க்கும் வரை என இப்போது கூறிக் கொள்கின்றார்.

ஏனெனில் மக்களைக் கொல் வதற்கும், சொத்துக்களை அழிப்பதற்கும் இப்போது காரணம் சொல்லத்தேவையில்லை. சதாம் ஹுசைன் மக்களிடையே ஒழிந்து வாழ்கின்றார். அவரை அழிக்க வேண்டுமாயின் மக்களையோ, சொத்துக்களையோ கவனத்தில் கொள்வது இயலாத ஒன்று என்று



காரணகாரியத்துடன் விளக்கமும் கொடுக்கின்றார்.

ஏற்கனவே 1991 வளைகுடா யுத்தத்தில் களத்தில் மட்டும் 1 இலட்சத்து 45,000 பேர் மாண்டு போயுள்ளனர். களத் திற்கு வெளியே 4(000 பேரும், பொதுமக்கள் 5000 பேரும், போர் முடிந்த பின்பு போரின் தாக்கம் காரணமாக ஒரு இலட்சம் ஈராக்கியர்களும் இறந்து போயுள்ளனர். ஐம்பது இலட்சம் பேர் நாட்டை விட்டும் வெளியேறி யுள்ளனர் அப்படி என்றால் இப்போதைய போர் எத்தனை கோடிமக்களைப் பலிகொள்ளப் போகின்றது...?.

அது மட்டுமா.... இயந்திர மயமான உற்பத்தியில் முன்னணி யிலும், நல்ல முறையில் நாகரிகம் பெற்றும் விளங்கிய ஈராக்கை அமெரிக்கா குண்டுகளால் சிதைத்து நிர்மூலமாக்கி 50 வருடங்கள் பின்னோக்கிப் பாதாளத்தில் தள்ளி விட்டது. ஈராக்கின் அப்போதைய மொத்த இழப்பு 190 மில்லியன் எனவும் கூறப்படுவதால், தற்போதைய யுத்தம் எத்தனை வருடங்கள் பின்னோக்கி ஈராக்கை தள்ளப் போகின்றது... இழப்புக்கள் எத்தனை மில்லியனை தாண்டப் போகின்றது....

**அ.கலைவாணி**

ஈராக்கிற்கு மட்டும் தானா இழப்பு.... அமெரிக்காவுக்கு இல்லையா என்றால்......

ஏற்கனவே தொடரப்பட்ட யுத்தம் தொடர்கதையாக தொடர்வதால் அமெரிக்காவின் பொருளாதாரம் ஆட்டம் காணத்தொடங்கி விட்டதாக அவதானிகளிடையே கருத்து நிலவுகின்றது.

இது மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரொம்ஸ் பீல்ட் ஈராக் தாக்குதலில் வகுத்த இராணுவ நடவடிக்கைகள் பிசுபிசுத்துப் போய்விட்டதாக ஓய்வு பெற்ற அதிகாரிகள் விமர்சிக்கின்றனர்.

இவற்றை எல்லாம் ஈடுகட்ட வேண்டுமானால், ஈராக்கின் சனாதிபதி சதாம் ஹுசைனும், மகன்களும் மரணத்தைத் தழுவ வேண்டும்.

அப்படியான நிலை உருவாகும் போது, ஆப்கானிஸ்தானில் சனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஹமீது கர்சாயை போல, ஈராக்கிலும் தனது சொல்லுக்குள் கட்டுப்படும் பொம்மை சனாதிபதியை தேர்வு செய்வதன் மூலம் எண்ணெய் வளத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக் கமுடியும். போரின் இழப்புக்கள் அனைத்தையும் ஈடு கட்டிவிட முடியும். இதுவே புஷ்ஷின் திட்டம்,ஆசை என சிலர் கூறுகின்றனர்.

புஷ்ஷின் இந்த ஆசை நிராசையாகவும் கனவு பலிக்காமல் தவிடு பொடியாகவும் ஆகும் நிலைகளும் உருவாகக் கூடும் என போர் வல்லுநர்கள் கருதுகின்றனர். இதற்குக் காரணங்கள்

1 ஈராக்கில் தற்கொலைப் படைகள் 4000ற்கும் மேற்பட்டோர் தயாராகி வருகின்றனர்.

2. யுத்தம் உக்கிரமடைந்தால் எண்ணெய் கிணறுகளை மீண்டும் ஊற்றெடுக்காதவாறு



இரசாயன வெடிபொருட்களைப் போட்டு அழிக்கும்படி சதாமின் உத்தரவு.

3. ஈராக்கிய மக்கள் ஈரான், குவைத் என காலத்திற்கு காலம் யுத்தங்களில் ஈடுபட்டவர்கள். இப்போது அவர்கள் குடும்பத் தலைவர்கள், தலைவிகள் ஆக இருக்கின்றார்கள். ஆனால் பயிற்றுவிக்கப்பட்ட போர் வீரர்கள், வீராங்கனைகள். அனைவரும் ஆயுதம் ஏந்தினால் அமெரிக்கா பெரும் சிக்கலிற்கு உள்ளாக வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, அமெரிக்காவின் இந்தத் தேக்கம் பின்னடைவாகுமா... ஈராக் மக்களைக் காப்பாற்றாது ஐ.நா. வாய்மூடி மௌனியாக இருக்குமா... ஈராக்கின் வியூகம் வெற்றியளிக்குமா.... உலக நாடுகள் பேசாமடந்தைகளாக நடப்பபைப் பார்த்திருக்குமா... என்பனவே நிகழ்கால வினாக்களாக உள்ளன.

# நியாப் திட்ட செயற்பாடுகளின் கீழ் இவ்வாண்டில் 47 கிராமங்கள் அபிவிருத்தி

(அலுவலக செய்தியாளர்)

**நியாப் திட்டத்தின் சமூகவலுவூட்டல் செயற்பாடுகளின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் இவ்வாண்டில் 47 கிராமங்களிற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தமொன்றும் கைச்சாத்தாகியுள்ளது.**

2003 ஆம்ஆண்டுக்கான நியாப் திட்ட சமூகவலுவூட்டல் செயற்பாடுகள் கிளிநொச்சி/ முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

உலகவங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வடக்கு/கிழக்கு நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் 2003ஆம் ஆண்டு செயற்பாட்டு ஒப்பந்தத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கைச்சாத்திட்டுள்ளது.

இத்திட்டத்தில் 47 கிராமங்கள் இவ்வாண்டின் நியாப் திட்ட வேலைத் திட்டத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் 29 கிராமங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளையோருக்கான தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம்

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் தொழில்வழிகாட்டல் வேலைத் திட்டம் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ். சண்முகவடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உயர்தரப் பாடசாலைகளிலிருந்தும், இளைஞர் கழகங்களிலிருந்தும் இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டனர். தொழில் வழிகாட்டல் தொடர்பான விரிவுரைகளையும் கலந்துரையாடல்களையும் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பொ.பேரின்பநாயகம், க.சரவணபவன் ஆகியோர் வழங்கினார்கள். (26)

# கூட்டுறவுச் சங்கத் தலைமை காரியாலயம் இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் 7ஆம்திகதி முதல் கரடிப்போக்குச் சந்தி அருகாமையில் உள்ள முருகன் ஸ்ரோஸ் தனியார் கட்டடம் ஒன்றில் இது இயங்கவுள்ளது.

மேற்படி சங்கம் கிளி/ தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் அதிகாரிகளின் முறைப்பாடுகள் பொலிஸ்சேவை ஆணைக்குழுவில் தேக்கம்

பொலிஸ் சேவையில் கடமையாற்றும் பல்வேறு தரத்திலான அதிகாரிகளினது முறைப்பாடுகள் பொலிஸ் சேவை ஆணைக் குழுவிடம் தேங்கிக்கிடப்பதாக அறியவருகிறது.

பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், சம்பள உயர்வுகள் போன்ற விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகளே அவையாகும்.

இது தொடர்பாக ஆணைக்குழு தெரிவித்திருப்பதாவது; இங்கு கடமையாற்றும் ஊழியர் பற்றாக்குறை இதற்குக் காரணம் என்றும் அமைச்சுக்கு இது தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

எவ்வாறெனினும் ஓய்வுபெற்ற ஊழியர்களையாவது பணிக்கமர்த்தி ஆணைக்குழுவின் வேலைப்பளுவை நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவை இடம்மாற்றுவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க குழு வருகை

உலக உணவு விவசாய ஸ்தாபனமும், ஐக்கிய நாடுகள் திட்டப்பிரிவும் இணைந்து நன்னீர் மீன் வளர்ப்பையும், கடற்றொழிலையும், வடக்கு கிழக்கு மாகாணத்தில் விருத்தி செய்ய உள்ளன.

இது சம்பந்தமான திட்டங்களுக்குப் பொறுப்பான குழுவினர், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். முதலில் மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகளைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர்

# அன்னை நினைவாக சிரமதானம்

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 15ஆம் ஆண்டு நினைவுத்தினத்தில் ஊரக வளர்ச்சிப்பணி குழுத் தலைமையில் அண்மையில் சிரமதானப் பணி இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச ஊரக வளர்ச்சிப் பணியைச் சேர்ந்த சி.செழியன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைக்க கிராமத்தின் மாதர்சங்கத் தலைவி வே. சிந்தாமணி படத்திற்கான ஈகச் சுடரினையும், மாலையினையும் அணிவித்தார். பின்னர் மலர் வணக்கம் நடைபெற்றது. தொடர்ந்து 12.00 மணிவரை சிரமதானம் நடைபெற்றது.

# விழிப்புணர்வு செயற்பாடுகளால் மலேரியாத் தாக்கம் குறைகிறது

வடமராட்சி கிழக்கில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை ஆரம்பிக்கப்பட்டபோது மலேரியாவின் தாக்கம் கூடுதலாக இருந்தது. மலேரியா நோய்க்கு சிகிச்சையளிக்கும் பெரும்பணி இந்த மருத்துவமனைக்கே இருந்தது. ஆனால் கடந்த நான்கு மாதங்களாக யாழ்.மாவட்ட மலேரியாத்தடை இயக்கத்தின் செயற்பாடுகளாக பேமத்திரின் எனப்படும் கிருமி நாசினியால் மருந்து ஏற்றப்பட்ட நுளம்பு வலையை வழங்கி வந்துள்ளது. அத்துடன் மலேரியா சம்பந்தமான விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். வைத்திய கலாநிதி சிவபாதத்தின் ஒழுங்குபடுத்தலில் இது நடைபெற்று வருகின்றது.

ஆழியவளை திலீபன் மருத்துவ சேவையினர் வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள் குடியமர்ந்துள்ள இடங்களுக்கும் சென்று இல்லத் தரிசிப்புக்கள் மூலம் சுகாதார விழிப்புணர்வுகளையும் மேற்கொள்வதோடு மலேரியா நோய்க்கும் சிகிச்சை பெற்றவர்கள் அதனை உரிய முறையில் உள் எடுக்கிறார்களா என்பதையும் இல்லத் தரிசிப்பு மூலம் கவனிப்பதும் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (11)

# மீளக் குடியேறும் மக்களுக்கு விவசாய உள்ளீடு வழங்கல்


உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மீளக்குடியேறிவரும் விவசாயிகளுக்கு கால் ஏக்கருக்குரிய கௌப்பீ, பயறு, சோழன்,மிளகாய், நிலக்கடலை போன்ற உள்ளீடுகளை முதற்கட்டமாக 20 பேருக்கு வழங்கியுள்ளது.

இவர்களுக்குரிய விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. மீளக்குடியேறிவரும் விவசாயிகளுக்கு இதுபோன்ற உள்ளீடுகளையும் அதற்கான உபகரணங்களையும் உதவி அரச அதிபரினால் நடத்தப்பட்ட விவசாய குழுக்கூட்டத்தில் வழங்குவதின் அவசரத்தை வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வலியுறுத்தியதன் பயனாக வவுனியா வடக்கு விவசாயிகள் 1250 பேருக்கு உள்ளீடுகளும் விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

# பொ.ஐ.மு. ஆதரவாளர் மீது தாக்கு; ஒருவர் காலிழப்பு: 4 பேர் காயம்!

கண்டி மாவட்டத்திலுள்ள ஹங்கு ராங்கெட்ட தேர்தல் தொகுதியில் இனம்தெரியாத நபர்களால் பொ.ஐ.மு ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. 30 ஆம் திகதி இரவு 08.00 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் ஒருவர் கால்களை இழந்ததுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர். காலிழந்தவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின்போது அரசியல்வாதி ஒருவரின் உறவினர் இச்சம்பவத்தில் தொடர்புபட்டிருப்பதாக தெரியவருவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.



திருமலை கோணேஸ்வரர் ஆலய தேர் வெள்ளோட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம். இன்று அங்கு தேர்த்திருவிழா.

# பாராளுமன்றுக்கு கிரமமாக சமுகமளிக்காத சு.க. உறுப்பினர்கள் மீது துரித நடவடிக்கை!

பாராளுமன்ற கூட்டங்களுக்கு கிரமமாக சமுகமளிக்காத சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு குழு ஒன்றை நியமிப்பதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழான குழுவில் மைத்திரிபால சேனநாயக்க, மங்கள சமரவீர, மகிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட மேலும் பலர் அங்கம் வகிக்கின்றனர்.

முக்கியமாக அமைச்சரவை விவாதங்களிலும், வாக்கெடுப்புக்களிலும் பங்கெடுக்காத உறுப்பினர்கள் மீது துரித நடவடிக்கை எடுப்பது பற்றி கண்டியில் சனாதிபதி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

# ஜே.வி.பி.யுடன் பேசிக்கொண்டே ஐ.தே.க.வுக்கு சு.க. கையசைக்கிறது

சி.ல.சு.கட்சி ஜே.வி.பியுடன் அரசியல் கூட்டுபற்றி பேசிக்கொண்டே தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ஐ.தே.க. வுக்கும் கைகாட்டுகிறது என ராவய சிங்கள பத்திரிகை தெரிவிக்கிறது.

தேசிய அரசு தொடர்பாக சிறில. சு.கா.வின் முக்கியஸ்தர் ஒருவர் ஐ.தே.க.வின் முக்கியஸ் தர்கள் சிலருடன் ஆரம்பப் பேச்சு நடத்தியிருப்பதாகத் தெரிகிறது.

தேசிய அரசு அமைப்பதற்கான இறுதி முடிவு எடுக்கும் வரை ஜே.வி.பியுடன் முரண்பட்டு விடக்கூடாது என்ற கருத்தும் சனாதிபதிக்கு உள்ளது. எனினும் தமக்கு சாதகமான கூட்டு ஒன்று ஐ.தே.க. வுடன் மட்டுமே என்பதில் நம்பிக்கையோடுள்ளார் எனவும் தெரிகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சொந்தப் பிரதேசங்களில் கடமையாற்ற வைத்தியர்கள் மறுப்பது வேதனைக்குரியது

## மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

**மருத்துவக் கல்வியை முடித்து வெளியேறும் வைத்தியர்கள் தங்களது சொந்தப் பிரதேசங்களில்கடமைபுரிய மறுக்கின்றனர். இது மிகுந்த வேதனையளிக்கும் விடயமாக இருக்கிறது என கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி கவலை தெரிவித்துள்ளார்.**

பச்சிலைப்பள்ளி பளை அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவிவருகிறது.

இதுகுறித்து நேற்று முன்தினம் கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற கிளி. மாவட்ட சுகாதாரக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. பளை வைத்தியசாலையில் வைத்தியர்கள் அற்ற நிலையில் பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் இருந்து வைத்தியத் துறைக்கு தெரிவுசெய்யப்பட்டு மருத்துவர்களாக வெளியேறியவர்கள் கூட மேற்படி பிரதேசத்தில் வந்து கடமையாற்ற மறுத்துள்ளதுடன், தற்போது யாழ். வவுனியா மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகின் றமையினைக் காணக்கூடியதாகவுள்ளதெனவும். இன்றைய இக்கால கட்டத்திலும் தங்கள் பிரதேசத்தின் நிலமை யினை மனதில்கொண்டு பணியா ற்ற வேண்டிய இவ் வைத்தியர்கள் மேற்படி பகுதிக்கு வந்து அர்ப்பணிப்புடன் பணியாற்ற மறுப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக அமைந்துள்ளதென கிளி. மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி இக்கூட்டத்தில் கவலை தெரிவித் தார்.

இந்நிலையில் மற்றைய மாவட்டங் களிலுள்ள வைத்தியர்களை இப்பிரதேசத்திற்கு வந்து பணியாற்றும் படி வேண்டுவதென் பது எவ்வாறு சாத்தியமாகு மெனவும் அவர் கேள்வியெழுப்பினார். (சோ. லோ)

## ஒன்று கூடல்

வள்ளிபுனம் வலயத்தின் அனைத்து பொது அமைப்புகளிற்குமான ஒன்றுகூடல் வள்ளிபுனம் ஊரக தே.எ.பேரவைச் செயலர் மாதவராசா தலைமையில் வள்ளிபுனம், கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமகால அரசியல் கருத்துக்களை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அதிபர், ஒதியமலை பாடசாலை அதிபர், வள்ளிபுனம் கிராம அலுவலர் சிவராசா, முல்லை மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சின்னண்ணை ஆகியோர் வழங்கினர்.

புதுக்குடியிருப்பு நகர் வலயம், வள்ளிபுனம் வலயப்பொறுப்பாளர்கள், சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆகியவர்களுடன் பொது அமைப்பு பிரதிநிதிகள், மக்கள் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். (19)

## கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி

மாணவர்களிடம் இலைமறைகாயாக மறைந்துகிடக்கும் படைப்பாற்றல் திறனை விருத்திசெய்யும் முகமாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி யொன்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது

தரஅடிப்படையில் மாணவர்களை ஆறு பிரிவுகளாப்பிரித்து இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. சஞ்சிகை 30 பக்கங்களில் இருந்து 100 பக்கங்களைக் கொண்டிருப்பதாக அமை யவேண்டும்.

இப்போட்டிகள் பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலயமட் டம், மாகாணமட்டம் என இடம் பெறவுள்ளன.

மாகாண மட்டப்போட்டிகளின் இறுதித்தினம் யூலை 31 ஆகும். போட்டி விபரங்கள் வலயக் கோடடக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும், மாகாணக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் அனுப்பி வைத்துள்ளார்.

## - உலர் உணவு நிவாரணத்திற்கு -
# யாழ். இற்குத் தேவையான நெல்லை வன்னியில் கொள்வனவு செய்ய அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட உலர் உணவு நிவாரணத்திற்குத் தேவையான 3000மெற்றிக்தொன் முதல் 4000 மெற்றிக்தொன் வரையான நெல்லினை கிளிநொச்சி மற்றும் முல்லை மாவட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனுமதியினை யாழ். மாவட்ட அரச அதிபருக்கு நிதி அமைச்சு வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து நேற்றுமுன்தினம் அரச செயலகத்தில் வைத்து அரச அதிபர் தி. இராசநாயகம் எமது செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்; இதன் காரணமாக கிளி. முல்லை மாவட்டங்களில் இருந்து 3000 மெற்றிக்தொன் முதல் 4000 மெற்றிக்தொன் வரையிலான நெல்லினை யாழ். மாவட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்கான வழிவகை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இம்மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நன்மை பெறவுள்ளனர். முக்கியமாக விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்வனவு செய்பவர்கள் ஒரு மூடை (70கிலோ) நெல்லினை 910 ரூபா வீதம் கொள்வனவு செய்யவேண்டும் எனவும், இது அனைவரதும் தார்மீகப் பொறுப்பு எனவும் கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார். (சோ.லோ)

## - உயர்தர வகுப்புகளில் நிலவும் -
# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நியமிக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரிய நியமனத்தின் போது இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

முதல்கட்டமாக கலை, வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலக மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.நீக்கிலாஸ் பிள்ளை கலந்து கொண்டார்.

# மாத்திரைகளை உட்கொண்டு சிறுமி ஒருத்தி தற்கொலை

(அலுவலக செய்தியாளர்)

மாத்திரைகளை உட்கொண்டு சிறுமிஒருத்தி தற்கொலை செய்து கொண்டுள் ளார்.

பரந்தன், முதலாம் கட்டைப்பகுதியில் கடந்த திங்கள் அதிகாலை 1.30 மணிக்கு அதிக மாத்திரைகளை உட்கொண்டு கிளி. முதலாம் கட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார். பரந்தன் முதலாம் கட்டையைச் சேர்ந்த குருசாமி ராஜேஸ்வரி (வயது 15) என்ப வரே இவ்வாறு மரணமானவர் ஆவார். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி காவல் பணிமனையினர் தற்கொலை என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என தெரிவித்துள்ளனர். (பா)

# கபடி, தாச்சிப் போட்டிக்கான விண்ணப்பம் பெறும் இறுதிநாள்

(அலுவலக செய்தியாளர்)

வன்னி மாவட்ட விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்பட இருக்கின்ற தாச்சி,கபடிப் போட்டிக்கான விண்ணப்பங்களைப் பெற்ற கழகங்கள் அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 05-04-2003க்கு முன்னதாகவும், இதுவரை மேற்படிப் போட்டிகளுக்குப் பதிவு செய் யாத கழகங்களும் தங்களுக்கான விண்ணப்பங்களைத் தங்கள் பகுதி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் அல்லது வன்னி மாவட்ட விளையாட்டுத் துறைச் செயலகத்தில் சந்திரனிடம் பெற்று பூர்த்தி செய்து மேற்படி திகதிக்கு முன்னர் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத் தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுவதுடன் 05 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த வித விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என வன்னி மாவட்டத் தமிழீழ விளையாட்டுத்துறை யினர் தெரிவித்துள்ளனர். (சோ.லோ)

# ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் 2102 பேருக்குச் சிகிச்சை

(வடமராட்சி கிழக்கு)

ஆழியவளையில் அமைந்த தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் பங்குனி மாதத்தில் வெளிநோயாளர் பிரிவில் 2102 பேருக்கு சிகிச்சை அளித்தனர்.

வைரஸ் காய்ச்சல் 290,சுவாச வழித்தொற்றுக்கள் 289, மலேரியாக் காய்ச்சல் 124 பேர், உயர் குருதி அமுக்கம் 21, குடற்புளு தொற்றுக் கள் 246. வயிற்றோட்டம் 58, பாம்புக்கடி 08, விபத்துக் காயங்கள் 12, தொய்வு 92, ஏனையவை 962 மொத்தமாக 2102 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர். (11)


பாராட்டுகின்றோம்

செல்வி சிந்துஜா மதுரநாயகம்

2003 சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் எமது கல்லூரியில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவி செல்வி சிந்துஜா மதுரநாயகம் 2ம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகளை நிலை நாட்ட வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்,
பாடசாலை-
அபிவிருத்திச் சங்கத்தினர்

கிளி/ இந்துக்கல்லூரி,
கிளிநொச்சி.

சி: 7825



கண்ணிவெடி

விழிப்புணர்வு வாரம்

01-07.04.2003

உங்கள் காணிகள் அமைந்துள்ள இடங்களுக்குச் செல்லும் அனுமதி மறுக்கப்பட்டால் அங்கே பாதுகாப்பு இல்லை என்பதுதான் அர்த்தம்

யுனிசெப் வெண்புறா நிறுவனம்

(சி.8043)

## சிந்தனைக்கு

விடுதலை உணர்வே மனித ஆத்மாவின் சாரமாக-உயிர்மூச்சாக-இயங்குகின்றது. மனிதவரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-04-2003

## மக்கள் உணர்விற்கு மாறாக....!

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான நிலப்பரப்பில் படைத்தளம் அமைக்கும் சிறிலங்கா இராணுவத்தின் முயற்சிக்குத் தமிழ் மக்கள் சார்பிலிருந்து பலத்த ஆட்சேபம் எழுந்துள்ளது. இப்படைமுகாம் அமைக்கும் திட்டத்தை இராணுவத்தரப்பு கைவிடாத பட்சத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வெகுசன அமைப்புகளின் ஒன்றியமும், அரசியற்கட்சிகளும் தயாராகிவருகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கான முயற்சிகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரினும் சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி ஏனைய அரசியற்கட்சிகளும் சரி தமிழ் மக்களின் உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றே கொள்ளவேண்டியுள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில், அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மழுங்கடிக்க அன்றிப் புறம்தள்ள எண்ணுகின்றனர் என்பதாக இருக்கமுடியும்.

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் ஓர் அமைதியான வாழ்வைத்தொடரவே விரும்புகின்றனர். வேறு விதமாகக் கூறுவதானால் இராணுவ நிர்ப்பந்தங்களோ அன்றி அரசியல் நிர்ப்பந்தங்களோ எதுவுமற்றதொரு அமைதியான வாழ்க்கையை அவர்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆனால் இலங்கைத்தீவை ஒரே அரசாக நிர்வகிக்க முயலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இதனைப் புரிந்து கொள்வதாகவோ அன்றி இதனைப் பொருட்படுத்துபவர்களாகவோ இல்லை.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம் பெற்ற போரின் பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போரில் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்த போதும், அவர்கள் தமது உரிமைகள் உறுதிசெய்யப்படாதவிடத்து போரை நடத்துவதற்கு தயாராகவே உள்ளனர் என்பது அனைவருக்குமே தெரிந்ததொன்று.

அதாவது தற்பொழுது இனப்பிரச்சினைத் தீர்விற்கென நடைபெறும் பேச்சுவார்த்தையானது, இலங்கைத்தீவில் இரண்டாவது அரசு ஒன்று உருவாகாது, தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் அமைதியாக வாழ்வதற்கு ஏற்றதொரு தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கானதொன்றே ஆகும். அதாவது சமாதான முறையில் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்த முடிவொன்றை எடுப்பதற்கானதே ஆகும்.

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் பல்வேறு காரணங்களுக்காக பல எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். இவ் எதிர்ப்புப் போராட்டங்கள் ஒவ்வொன்றும் சிறிலங்கா அரசினதோ அன்றி இராணுவத்தினதோ தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறான செயற்பாட்டின் காரணமாக எழுந்தவையே ஆகும்.

ஆனால், சமாதான முயற்சிகளில் அரசாங்கம் பூரணமான விசுவாசம் கொண்டதாக இருப்பின் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? என்பது சந்தேகமே. ஏனெனில் அரசின் செயல் தமிழ் மக்களின் மனங்களில் நம்பிக்கையை வளர்க்கக் கூடியதாகவும், இரு இனங்களும் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற உணர்வைத் தோற்றுவிக்கத்தக்கதாகவும் இருந்திருத்தல்வேண்டும். ஆனால், ஆட்சியாளர்களின் நடவடிக்கையோ, எப்படித் தமிழர் தாயகப் பகுதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, எவ்வாறு தமது நிலையை உறுதிப்படுத்திக்கொள்வது, போன்றதாகவே உள்ளன.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான நிலப்பரப்பில் இராணுவம் படைத்தளத் தொகுதி ஒன்றை, அமைக்க முற்படுவதும் இதை ஒத்த நடவடிக்கையே ஆகும். இது வீட்டின் உட்புறத்தில் இருந்து வெளியேறி வீட்டின் வாயிற் புறத்தில் வந்து அமர்ந்து கொள்வது போன்றதொரு நடவடிக்கையாகும். இது சமாதான பயன்பாட்டிற்கு ஏற்புடையதாகவோ, சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையானதாகவோ இல்லை.

ஆகையினால், இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் உண்மையிலேயே சமாதான முயற்சிகள் மூலம் தீர்வொன்றைக் காண்பதானால் முதலில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறான வகையில் செயற்படுவதை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும். அரசாங்கம் இராணுவ நலன்களை முதன்மைப்படுத்திச் சிந்திப்பதையும், செயற்படுவதையும் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இது சமாதான முயற்சிகளுக்கு, முன்னோடி நடவடிக்கையாக அமையக் கூடியதாகும்.

அவ்வாறு இல்லாது, அரசாங்கம் இராணுவ நலனிலேயே அக்கறை காட்டுவதாக இருந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறைப்பிரசவத்தை ஒத்ததாக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும். தமிழ் மக்கள் சமாதான முறையில் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனரேயொழிய தமது இயலாமை காரணமாக சிங்கள ஆட்சியாளர்களிடம் எதையும் யாசித்து நிற்கவில்லை. இன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் இதைப் புரிந்துகொள்ளத் தவறினால், கடந்தகால ஆட்சியாளர்கள் செய்த தவற்றையே இவர்களும் இழைத்தவர்கள் ஆகின்றனர்.

# பேச்சுக்கள் மூலமே உலகின் யுத்தங்கள் அனைத்தும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன

## -சிறிலங்கா சனாதிபதியின் உபதேசம்

(கொழும்பு)

உலகின் சகல யுத்தங்களுமே பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்காக செலவிடப் படவேண்டிய இளைஞர்களின் சக்தி, யுத்தத்திற்காகச் செலவிடப்படவேண்டியுள்ளது என அவர் கவலை தெரிவித்துள்ளார். வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர் சிறிலங்கா இராணுவத்திற்கு சேர்க்கப்படவேண்டிய வீரர்களின் தொகை வட-கிழக்கு யுத்தம் காரணமாக 39 ஆயிரத்திலிருந்து 1 லட்சத்து 56 ஆயிரமாக அதிகரிக்கப்பட வேண்டியிருந்தது என அவர் கூறியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டில் தேவையற்ற அரசியல் மோதல்கள் காரணமாக இளம் உயிர்களை அதிகளவில் இழந்த 15 நாடுகளில் ஒன்றாக இலங்கையும் கருதப்படுகிறது.

பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் தாம் வழங்கியுள்ள நிறைவேற்று அதிகாரங்களை ஒரு போதும் மீளப்பெறும் நோக்கம் எனக்கு இல்லை.

அரசியல் அமைப்பு மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களில் 85 வீதமானவற்றை பிரதமருக்கும், அமைச்சர்களுக்கும் வழங்கியுள்ளேன்.

சமாதான நடவடிக்கைகள் பூரண வெற்றிபெற வேண்டும் என்கின்ற நோக்கிலேயே எனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை வழங்கியுள்ளேன் என்றும் அப்போது அவர் மேலும் கூறினார்.

# ஐ.தே.க. – பொ.ஐ.மு செல்வாக்கை மதிப்பிட சனாதிபதி இரகசிய பணிப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் லண்டனுக்குப் புறப்படமுன் நாடு முழுவதும் தமது கட்சிக்கும் ஐ.தே. கட்சிக்கும் உள்ள அரசியல் செல்வாக்கை அறியும் வகையில் இரகசிய கருத்துக்கணிப்பை நடத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது நெருங்கிய ஆலோசகர்களைப் பணித்துள்ளார்.

எதிர்காலத்தில் தாம் மேற்கொள்ளவுள்ள அரசியல் தீர்மானங்களுக்கு இதன் பலாபலன்கள் உதவியளிக்கும் என்ற எண்ணத்தில் அவர் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி தொடர்ந்தும் அப்பதவியில் இருப்பதா? தற்போதைய அரசின் சமாதானமுயற்சிகளில் மக்கள் உண்மையாக சிந்திப்பது என்ன? கட்சியின் கொள்கைகள் மாற்றப்படவேண்டுமா? என்பவற்றிற்கான பதில்கள் அறியப்படுதலே சனாதிபதியின் கருத்துக் கணிப்பின் நோக்கமாகும்.

# மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தில் அறிக்கை

## தமிழர் மனித உரிமைகள் மையம்

(லண்டன்)

ஜெனிவாவில் நடைபெற்று வரும்மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 59ஆவது கூட்டத் தொடரில் 63 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை தமிழர் மனித உரிமைகள் மையம் சமர்ப்பித்துள்ளது.

சிறிலங்கா படையினரின் மனித உரிமை மீறல்கள், விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட பொதுமக்களின் விபரங்கள் மேலும் பல விடயங்கள் அடங்கியதாக இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர்கள் குழு என்ற பெயரில் அரசாங்கத்தின் பணத்தில் கொழும்பில் இருந்து இயங்கி வரும் அமைப்பின் போலித்தனம் தொ[illegible]பாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இத்தாலி செல்ல முயன்ற 10 பேர் பேருவளையில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செல்லமுயன்ற பத்துப் பேர் நேற்று முன்தினம் பேருவளையில் வைத்து சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சென்ற படகை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்தப் படகில் ஒரு மாதத்திற்குப் போதுமான உணவுப்பொருட்கள் இருந்துள்ளன.

இத்தாலி செல்வதற்காக ஒவ்வொருவரிடம் இருந்து ஏழு லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது.

## மின்சார சபை ஊழியர் போராட்டம் முடிவு!

சிறிலங்கா மின்சாரசபை ஊழியர்கள் கடந்த 25 தினங்களாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பாக நியமிக்கப்பட்ட டி.சி.பெரேரா தலைமையிலான ஆணைக்குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கைக்கு அமைவாக வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

# தென்மாகாண சபை நிர்வாகத்திற்கு எதிராக காலியில் ஆர்ப்பாட்டம்

## அரச ஊழியர் பெருந்தொகையில் பங்கேற்பு

(கொழும்பு)

பல தொழிற்சங்கங்கள் ஐ.தே.க. தலைமையில் கடந்த திங்களன்று காலியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளன.

காலி நகருக்கு வெவ்வேறு இடங்களிலும் இருந்து வந்த ஆர்பாட்டக் காரர்களுள் ஆசிரியர்கள், எழுதுனர்கள், தொழிலாளர்கள் ஆகியோரும் அடங்குவர்.

இவர்கள் முன் உரையாற்றிய மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் (ஐ.தே.க) இங்கு பணியாற்றும் ஐ.தே.க ஆதரவு ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வையோ, இடமாற்றத்தையோ, கடன் வசதியையோ செய்து கொடுக்கவில்லை எனக் கூறினார்.

மேலும் இப்பிரதேசத்தில் 72 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதியில் தமது ஆதரவாளர்கள் கொல்லப்பட்டதற்கும் கொலைப்பயமுறுத்தல் விடப்பட்டிருப்பதற்கும் கண்டனம் தெரிவித்தார். இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடப்பின் நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம் எனவும் கூறினார்.

# ஜப்பானிய பௌத்த மதக்குழு யாழ்ப்பாணம் விஜயம்

ஜப்பானைச் சேர்ந்த பௌத்த மதக்குழுவொன்று யாழ். குடாநாட்டுக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டுள்ளது.

ஜப்பானிய தலைமை பௌத்த மதகுரு வண. இக்போக குஜி தலைமையிலான குழுவிற்கு நாகவிகாரையில் சிறிலங்கா படையினரால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 மணிக்கு விசேட ஆராதனையை நடத்தியதுடன் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு விஜயம் செய்ததுடன் பல இடங்களையும் பார்வையிட்டனர்.

ஊர்வலத்தின் முடிவில் அங்குள்ள கதிரேசன் கோவிலில் 500க்கு மேல் தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

# திருமலையில் தொண்டராசிரியர்கள் மாகாணக் கல்வி அமைச்சின் முன்மறியல்

திருமலையில் இதுவரை சுழற்சிமுறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவந்த தொண்டராசிரியர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான நிரந்தர நியமனம் கோரி தொண்டர் ஆசிரியர்கள் கடந்த முப்பது தினங்களாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வந்தனர். இதனைத்தொடர்ந்து நேற்று திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் என்பவற்றின் முன்பாக அமர்ந்திருந்து, ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல விடாது மறியல்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த மறியல் போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொண்டர் ஆசிரியர்களின் நிலைமைகள் தொடர்பாக இன்று பிரதமரை சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் -

# உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து தேர்தல் திணைக்களம் விபரம் திரட்டுகிறது!

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் எத்தனை உள்ளூராட்சி மன்றங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளன என்ற விபரத்தை தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக திரட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்டங்களில் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு நேற்றுக் காலை அனுப்பி வைத்துள்ள அவசர பணிப்புரையில் விபரங்களை இம்மாதம் 5ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பி வைக்குமாறு பணித்திருக்கின்றார்.

விடுவிக்கப்படாத பிரதேசசபைகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்கள், விடுவிக்கப்படாத பிரதேசங்களிலும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் வாக்களிப்பு நிலையங்களைக் கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்கள், முழுமையாக விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களைக் கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்கள், முழுமையாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் வாக்களிப்பு நிலையங்களைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்களை தனித் தனியாக பட்டியலிட்டு அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

## கமநல அபிவி. திணைக்களம் ஏப்ரல் 10 முதல் முல்லையில்

தற்காலிகமாக புதுக்குடியிருப்பு கமநல மத்திய நிலையத்தில் இயங்கி வந்த முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மீண்டும் முல்லைத் தீவு நகரில் இயங்கவுள்ளது.

காரியாலயம் மாற்றுவதற்குரிய வேலைகள் நடைபெறுவதால் 08. 09 ஆகிய திகதிகளில் காரியாலய வேலைகள் நடைபெற மாட்டாது என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

### அமெ. வின்...

யுத்தப் பாதிப்புக்குள்ளான ஈராக்கிய பகுதியொன்றுக்கு நேற்று முன்தினம் சென்றனர்.

இங்குள்ள மருத்துவமனையில் பெருமளவு மக்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந் நகருக்கு அருகேயுள்ள கிந்தியா நகரிலும் அண்மைய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டும், காயமடைந்துமுள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாக்தாத்திற்கு தெற்கே என்ன நடக்கிறது என்பதை தெளிவுபடுத்த நடுநிலையாளர் எவரும் இல்லையென செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி கவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கப் படையினருக்கும், ஈராக்கிய படையினருக்கும் இடையில் கடுமையான சண்டை நடைபெற்று வருவதாகவும் ஈராக்கின் படைப்பிரிவுகளை பலவீனப்படுத்த அமெரிக்க விமானங்கள் கடுமையான ஏவுகணை மற்றும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நஸ்ரியா, இசானியா, பஸ்ரா, பாக்தாத் போன்ற பகுதிகளில் இரு தரப்புக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும், இரானியாவில் இருதரப்புக்கும் இடையில் எட்டு மணித்தியாலங்களாக நீடித்த மோதலில் 80 ஈராக் படையினர் கொல்லப்பட்டும் 40 பேர் சிறைக் பிடிக்கப்பட்டும் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதன்போது 25 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதாகவும் 35 டாங்கிகள் சேதமாக்கப்பட்டதாகவும் ஒரு உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாக்தாத்தில் சதாம் தாக்கியிருக்கலாம் என சந்தேகிக்கும் எட்டு அரண்மனைகள் மீது தொடர் தாக்குதலை நடத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


## நேர்முகத்தேர்வு

### பணிநிலை வேண்டுகை விளம்பர இல -45

மேற்படி விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 06.04.2003 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு, கிளிநொச்சி டிப்போச்சந்திக்கு அருகாமையிலுள்ள தமிழீழ போக்குவரத்துக் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்குரிய சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

-நிர்வாகம்.

(சி-8049)


### விசேட வைத்தி...

சிகிச்சைகள் 9.00 மணிமுதல் 5.00 மணிவரை இடம்பெறவுள்ளது. நாளை, நாளைமறுதினம் ஆகிய இரு தினங்களிலும் மேற்படி இலவச மருத்துவசிகிச்சை முகாமிற்கு நேரடியாகவே நோயாளர்கள் வருகைதந்து சிகிச்சையினை பெற்றுக்கொள்ளும்வண்ணம் கிளிமாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் வேண்டியுள்ளார். (சோ,லோ)

### சிறிலங்கா...

டைவர் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தத் துறைகளில் இதுவரை நாடு மேற்கொண்ட முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு புதிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

சுகாதார சேவைகளை புனரமைப்பதற்கும், நீர் விநியோக திட்டங்களை மேற்கொள்வதற்கும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கும் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# எதிரிகளை வீழ்த்தி மக்கள் போராட முன்வர வேண்டும்

## சதாம் ஹுசைன் கோரிக்கை

(பாக்தாத்)

எதிரிகளை வீழ்த்தி, மக்கள் விடுதலைப் போராட்டத்துக்கு முன்வர வேண்டும் என்று ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சதாம் ஹுசைனின் இவ் அழைப்பினை ஈராக்கின் செய்தித்துறை அமைச்சர் நேற்று அந் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

ஈராக்கில் கூட்டுப்படைகள் தாக்குதலை நேற்று 14 ஆவது நாளாகத் தொடர்ந்து வரும் நிலையில் இவ் அழைப்பை தனது மக்களுக்கு சதாம் விடுத்துள்ளார்.

அத்துடன் ஈராக் மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள அரபு மக்கள் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போருக்கு முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# சுகாதாரத் தொண்டர்கள் யாழ். இல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சுகாதாரத் தொண்டர்கள் நேற்றுக்காலை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் சுமார் 750க்கு மேற்பட்ட ஆண், பெண் சுகாதாரத் தொண்டர்கள் ஈடுபட்டனர். இதன் காரணமாக நேற்று சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் அலுவலகம் செயலிழந்தது.

இதில் நிரந்தர நியமனம் தொடர்பாக எமக்குச் சாதகமான பதில் தரும்வரை மறியல் போராட்டத்தை கைவிடமாட்டோம் எனவும் இதற்கு நியாயமான தீர்வு கிட்டும் வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர்.

## இளைப்பாறிக் கொண்டிருந்தவரை மோட்டார் சைக்கிள் மோதியது!

(மன்னார்)

மன்னார் பொது விளையாட்டு அரங்கின் வீதியின் அருகில் இளைப்பாறிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்தநிலையில் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சக்திவேல் (வயது-49) என்பவரே வெதுப்பகம் ஒன்றில் வேலை செய்துவிட்டு நேற்று அதிகாலை மேற்படி வீதியில் இளைப்பாறிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# கிளி.பொதுச் சந்தை வளாகத்தினுள் இரவில் எவரும் தங்குதல் கூடாது!

## - கிளி.மாவட்ட அரச அதிபர் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட பொதுச் சந்தை வளாகத்தினுள் இரவு வேளைகளில் எவரும் தங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளி. அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சுகாதார குழுக் கூட்டத்தின்போது கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்படி வளாகத்தில் இரவு வேளைகளில் மக்கள் தங்குவதால் பல்வேறு வகையான தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுவதுடன் பல அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கும் இவை காரணிகளாக அமைந்துள்ளன. எனவே இவ்விடயத்தில் உரிய நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளும் வண்ணம் கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் அவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (சோ,லோ)

# பிரதமர் அதிகாரங்களை மீளப் பெறப் போவதில்லை

## - சனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் தாம் வழங்கியுள்ள நிறைவேற்று அதிகாரங்களை ஒருபோதும் மீளப் பெறும் நோக்கம் தமக்கு இல்லை என்று சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களில் 85 வீதமானவற்றை பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் வழங்கியிருப்பதாக அவர் கூறுகின்றார்.

சமாதான நடவடிக்கைகள் பூரண வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை வழங்கியிருப்பதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.

### மாநகர...

விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மக்களது இயல்பு வாழ்க்கைக்கு தடையாக இந்த முகாம் அமைப்பு இருக்கிறது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இந்த வளாகத்தில் முகாம் அமைக்கும் நடவடிக்கையை தாம் இடைநிறுத்தியதாக திலக் மாரப்பன, அவர்களிடம் தெரிவித்தார். மேலும், எதிர்வரும் 09 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல ஆகியோரும் யாழ்ப்பாணம் சென்று மாற்றிடங்கள் பற்றி ஆராய்வர் என்றும் மாரப்பன குறிப்பிட்டுள்ளார்.

மாற்றிடமாக மக்களுக்கு ஓரளவு தொல்லை குறைந்த கல்லுண்டாய் பகுதியை கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்தனர். இதனை தாம் ஆராய்வதாக மாரப்பன கூறியுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.